கொழும்புத்துறை
வி குணபாலன்
கொழும்புத்துறை
மகேஸ்வரமூர்த்தி
சாவகச்சேரி
சி. சித்திரா
கோண்டாவில்
ம. சிறீரஞ்சனி
எழுதுமட்டுவாள்
து. காண்டீபமணி
சுதுமலை
மா. தவராஜா
கல்வியங்காடு
வே. ஜெயசீலன்
காந்தியூர்
பே. விக்ரோறியா
கோப்பாய் தெற்கு
விக்கினா
கைதடி
பா. இந்திராணி
சுன்னாகம்
சு. சரஸ்வதி
பருத்தித்துறை
சி. சரஸ்வதி
பருத்தித்துறை
சி. சந்திரசேகரம்
ஸ்ரேசன் முகாம்
க. தேவி
பாண்டியன் முகாம்
இ. திருநாவுக்கரசு

த. பொன்னம்பலம்
முழுங்காவில்
க. சிவபாக்கியம்
புலோலி
ம பாலகுமார்
சுன்னாகம்
ந கமலதாசன்
அச்சுவேலி
ந. சோதிமலர்
கரவெட்டி
E. ஞானப்பிரகாசம்
58. டேவிட்றோட்
ப. நேசம்மா
யாழ். இந்துகல்லூரி
த. துரைசிங்கம்
சாவகச்சேரி
பு. பரமலிங்கம்
ஓட்டுமடம். யாழ்.
சி. திருநாவுக்கரசு
சண்டிலிப்பாய்
த. இராஜேஸ்வரி
மானிப்பாய்
பொ. கிஸ்ணசிவம்
அரசடி, யாழ்.
ச. சின்னாச்சிப்பிள்ளை
புத்தூர் மேற்கு
து. பாஸ்கரன்
கோப்பாய்
த. லிங்கரட்ணம்
உடையார்கட்டு
கு நாகரட்ணம்
சுளிபுரம்
ச. செபமாலை
பருத்தித்துறை
சகாயகொன்றி
பருத்தித்துறை
ஜெ கரோலின்
பருத்தித்துறை
அ. மரியகொரட்டி
பருத்தித்துறை
நி. அருஞான சீலன்
பருத்தித்திதுறை
ம, தாசன்
பருத்தித்துறை
ஜெ. சண்முகநாதன்
திருநெல்வேலி
இ நவகுமார்
அம்பலப் பெருமாள்
அ. தனலாசி
மடு சேச்
சி. கெங்கலிங்கம்
நாவற்குழி
வ. அப்பையா
கோண்டாவில்
ச. சுப்பிரமணியம்
புலோலி
க. குணசேகரம்
யாழ்ப்பாணம்
அ. முத்துலிங்கம்
யாழ்ப்பாணம்
ப. ஆறுமுகம்
குருக்கள் மாணிக்கப்
பிள்ளையார், கிளி.
ம. பரமேஸ்வரன்
அல்வாய் வடக்கு
ந. யோகராஜா
சுளிபுரம்

## இராணுவ விசாரணை குழு மணலாறு விரைவு

(கொழும்பு)

மணலாறு மண்கிண்டி மலை முகாம் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னவினால் அமைக்கப்பட்ட இராணுவ விசாரணைக்குழு மணலாறு வந்தடைந்துள்ளது.

வடபிராந்திய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா தலைமையிலான இக் குழு விசாரணைகளை ஆரம்பித்தது. தகர்க்கப்பட்ட மண்கிண்டி மலை இராணுவ முகாமிற்கு வடக்காகவும் தெற்காகவும் அமைக்கப்பட்டிருந்த முகாம்களுக்கு இவர்கள் நேரில் சென்று ஆராய்ந்தனர். குழுவினர் ஜனகபுர சிங்கள குடியேற்ற பகுதி அமைந்திருந்த இடத்தையும் சென்று பார்த்தனர்.

## வட - கிழக்கு படை நிலைமை ரணில் அறிக்கைசமர்ப்பிப்பு

[கொழும்பு]

சிறிலங்காவின் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா அண்மையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள இராணுவ முகாம்களிற்குசென்றுபார்வையிட்டபோது தான்பெற்ற அவதானிப்புகளை சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவிற்கு அறிக்கையாக சமர்ப்பிக்கவுள்ளார்என ''திவயின'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் இம் முகாம்களில் இராணுவத்திற்குஉள்ள குறைபாடுகள் பற்றியும் இவர் அந்த அறிக்கையில் குறிப்பிடுவார் என அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நான்கு தமிழ் இளைஞர் கொழும்பில் கைது

சிறிலங்காகிரிக்கெட்ஆட்டக்காரர்கள் தங்கியிருந்த விடுதி அருகில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நான்கு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பில் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய - சிறிலங்கா அணிகளிடையிலான இரண்டாம் நாள் கிரிக்கெட்போட்டி நடந்துகொண்டிருந்தபோதே இச்சம்பவம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிரிக்கெட்போட்டி நடைபெறும் பகுதிகளுக்கு பலத்தபாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகவும் இந்திய ஆட்டக்காரர்கள் உள்ள ஹோட்டல்களுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## விசா மறுக்கப்பட்டோர் மீளவிண்ணப்பிக்க முடியாது

### ஐக்கிய இராச்சியம் அறிவிப்பு

(கொழும்பு)

இங்கிலாந்தில சொற்ப காலம் தங்கியிருக்க அல்லது சென்று பார்க்க விசா மறுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரர் மீளவும் முறையீடு செய்வதற்கான அனுமதியை இங்கிலாந்து அரசு நிறுத்தியுள்ளது.

நீண்டகாலம் இங்கிலாந்தில் தங்கியிருக்க, குடியமர மற்றும் மாணவருக்கு விசா மறுக்கப்பட்டிருந்தால், அவர்கள் தமது விண்ணபத்தைப் பரிசீலனை செய்யும் படி கோரலாம் என்று பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயத்தின அதிகார பூர்வமான அறிவிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

இம்மாதம் 26ஆம் திகதி அமுலுக்கு வந்த ஐக்கிய இராச்சியம் அகதி மற்றும் குடிவரவுச் சட்டம் 1993க்கு அமைவாகவே மேற்படி அறிவிப்பு விடப்பட்டது. பிரயாணத்தின் போது தரித்துப் போக வகை செய்யும் கட்டளை - ட்ரான்ஸிட் விஸா ஒடர் ஜூலை 22ல் அமுல் படுத்தபபட்டது.

ஐக்கிய இராச்சியம் அகதி மற்றும் குடிவரவுச் சட்டத்தின் பிரகாரம் அரசியல் புகலிடம் கோரும் விண்ணப்பங்கள் பயன் பொருத்தமாகவும், விரைவாகவும் பரிசீலிக்கப் படவுள்ளன

## அரசியலில் பிரவேசிப்பதில்லை சிறிமானி லலித் அறிவிப்பு

(கொழும்பு)

அரசியலில்தான் பிரவேசிக்கப் போவதில்லை என்று முன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமான அமரர் லலித்

பொருத்தமானது எனக் கருதுவதாகவும், இக்காலப் பகுதியில் தம்முடன் ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

எழுதுமட்டுவாழ்
க. ரவீந்திரன்
ஓமந்தை
ச. பார்வதி
ஸ்கந்தபுரம்
ச. றிடடா
கொட்டடி, யாழ்.
க. முருகேசு
சுளிபுரம்
க. நிதர்சன்
முள்ளியவளை
ச. நிசந்தன்
முள்ளியவளை
வே. நடராஜா
சண்டிலிப்பாய்
அ. றிச்சாட்
மார்ட்டின் றோட்
பெ. ஜேதவன்
அச்சுவேலி
எஸ். கமலாம்பிகை
இருபாலை
பே. அழகர்சாமி
யாழ்ப்பாணம்
வை. கமலசர்மா
அக்கராயன்
சி. சிவரட்டினம்
உரும்பராய்
சி. ரவிநதிரன்
ஆனைக்கோட்டை
ச. சந்திரபால்
வல்வெட்டித்துறை
ச. சத்தியமூர்த்தி
குப்பிளான்
வி. கனகம்மா
கல்வியன்காடு

சி. இராசமணி
கைதடி
கா. நாகரட்டினம்
மட்டுவில் தெற்கு
ஐ. அருந்தவராஜா
உரும்பிராய்
ஜே. கி. ஜெயசீலன்
வட்டுக்கோட்டை
செ. வசந்தாதேவி
ஏழாலை
க. சந்திரசேகரம்பிள்ளை
யாழ்ப்பாணம்
வி. மகாலிங்கம்
இணுவில் கிழக்கு
அ. தனாநந்தன்
ஆவரங்கால்
ந. சி. குலசிங்கம்
திசகம்
து. ஜெயம்
யாழ்ப்பாணம்
மூ. கணபதி
ஜெயபுரம்
சி. இராஜேந்திரம்
வரணி
நா. மாணிக்கத்தியாகராசா
கோண்டாவில் மேற்கு
வி. கமலநாதன்
தெல்லிப்பளை
மூ. வல்லிபுரம்
திருமலை
க. சுப்பிரமணியம்
தாவடி
க. கணேசன்
யாழ்ப்பாணம்

ப. சற்குணாதேவி
கண்டாவளை
சி. நந்தகுமார்
வட்டுக்கோட்டை
ஐ. பாலசிங்கம்
புத்தூர்
நா. நாகேஸ்
பொலிகண்டி, யாழ்.
செ. கணேஸ்
பளை
மூ. விஜெயேஸ்வரன்
நல்லூர்
ம. அருள்வாணி
சண்டிலிப்பாய், மத்தி.
ரா. திலகராணி
கல்வியங்காடு
அ. கயேந்திரன்
மயிலங்காடு, சுன்னாகம்.
க. இரத்தினம்
புத்தூர்
யே. கிருபாகரன்
நல்லூர்
சி. தர்மகுலசிங்கம்
சுன்னாகம்
கு. இரவி
உடையார்கட்டு
மூ. தங்கவேல்
உடையார்கட்டு
வ. சிவஜெதம்
சுன்னாகம்
ச. யேசுதாசன்
யாழ்ப்பாணம்
பெ. யோகேந்திரராசா
அம்பளப்பெருமாள் கிளி.
இ. நவகுமார்
அம்பனப்பெருமான் கிளி,

கோண்டாவில்
ம. சிறீரஞ்சனி
எழுதுமட்டுவாள்
து. காண்டீபமணி
சுதுமலை
மா. தவராஜா
கல்வியங்காடு
வே. ஜெயசீலன்
காந்தியூர்
பே. விக்ரோறியா
கோப்பாய் தெற்கு
விக்கினா
கைதடி
பா. இந்திராணி
சுன்னாகம்
சு. சரஸ்வதி
பருத்தித்துறை
சி. சரஸ்வதி
பருத்தித்துறை
சி. சந்திரசேகரம்
ஸ்ரேசன் முகாம்
க. தேவி
பாண்டியன் முகாம்
இ. திருநாவுக்கரசு
சுளிபுரம்
பி. ஜீவராசா
கனகராயன்குளம்
கு. சவிரிப்பிள்ளை
மாதகல்
இ. வைகுந்தநாதன்
பருத்தித்துறை
அ. வில்பேட்
கொழும்புத்துறை
செ. இராஜேந்திரம்
நெல்லியடி

ச. சுப்பிரமணியம்
புலோலி
க. குணசேகரம்
யாழ்ப்பாணம்
அ. முத்துலிங்கம்
யாழ்ப்பாணம்
ப. ஆறுமுகம்
குருக்கள் மாணிக்கப்
பிள்ளையார், கிளி.
ம. பரமேஸ்வரன்
அல்வாய் வடக்கு
ந. யோகராஜா
சுளிபுரம்

இங்கிலாந்தில சொற்ப காலம் தங்கியிருக்க அல்லது சென்று பார்க்க விசா மறுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரர் மீளவும் முறையீடு செய்வதற்கான அனுமதியை இங்கிலாந்து அரசு நிறுத்தியுள்ளது.

நீண்ட காலம் இங்கிலாந்தில் தங்கியிருக்க, குடியமர மற்றும் மாணவருக்கு விசா மறுக்கப்பட்டிருந்தால், அவர்கள் தமது விண்ணப்பத்தைப்

ரலாம் என்று பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயத்தின அதிகார பூர்வமான அறிவிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

இம்மாதம் 26ஆம் திகதி அமுலுக்கு வந்த ஐக்கிய இராச்சியம் அகதி மற்றும் குடிவரவுச் சட்டம் 1993க்கு அமைவாகவே மேற்படி அறிவிப்பு விடப்பட்டது. பிரயாணத்தின் போது தரித்துப் போக வகை செய்யும் கட்டளை - ட்ரான்ஸிட் விஸா ஓடர் ஜூலை 22ல் அமுல் படுத்தபபட்டது.

ஐக்கிய இராச்சியம் அகதி மற்றும் குடிவரவுச் சட்டத்தின் பிரகாரம் அரசியல் புகலிடம் கோரும் விண்ணப்பங்கள் பயன் பொருத்தமாகவும், விரைவாகவும் பரிசீலிக்கப் படவுள்ளன

சில தேச மக்களுக்கு வழங்கப்படும் தரித்துப் போக வகை செய்யும் விண்ணப்பங்கள் மறுக்கப்பட்டால், மீளவும் மறுபரிசீலனைக்கு விண்ணப்பித்தல் முடியாது. இலங்கையர்களுக்கு இந்த விசா தேவை என்னும் விதி ஏலவே அமுலில் உள்ளது.

## அரசியலில் பிரவேசிப்பதில்லை சிறிமானி லலித் அறிவிப்பு

(கொழும்பு)

அரசியலில்தான் பிரவேசிக்கப் போவதில்லை என்று முன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமான அமரர் லலித் அத்துலத் முதலியின் மனைவி சிறிமானி கூறியுள்ளார்.

கடந்த திங்களன்று கொழும்பில் அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மேலும் குறிப்பிடுகையில் தமது கணவரான அத்துலத்முதலி கொலையுண்ட மூன்றாவது மாதம் நிறைவுறும் இத்தருணம் தமது முடிவை அறிவிப்பதற்கு இது பொருத்தமானது எனக் கருதுவதாகவும், இக்காலப் பகுதியில் தம்முடன் ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

அத்துடன் எனது கணவருடன் நெருக்கமாகவும் கடுமையாகவும் ஒத்துழைத்து ஜ. ஐ. தே. முவை கட்டியெழுப்ப உழைத்த அனைவரும், தமது உணர்வுகளின் அடிப்படையில் ஜனநாயகக் கோட்பாடுகளையும் கணவரின் கொள்கைகளையும் முன்னெடுக்க பாடுபடவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.


A\L94 துரித மீட்டல் பாடத்திட்டம் அலகுரீதியானவினாவிடை

வடமராட்சியில் ஆரம்பமாகிவிட்டன

முற்றான பாடத்திட்டம் A/L95

❋ பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெறும் முதல் மூன்று மாணவரிற்கு இலவசக் கல்வி.

❋ வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவரிற்கு, சலுகைகள் உண்டு.

❋ திறமை, ஒழுக்க அடிப்படையில் புலமைப் பரிசில்கள்

❋ வகுப்புகளிற்கு அனுமதிக்கப்படுவதற்கு குறிப்பிட்ட வெற்றிடங்களே உண்டு.

மாணவர்களிற்கு விசேட ஊக்குவிப்புகள்

★ COLLEGE OF ★

NEPTUNES

பருத்தித்துறை வீதி, நெல்லியடிச் சந்தி.

பொருளியல் - II
வரதராஜன்
செவ்வாய் காலை 9.00

பொருளியல் - I
கருணாமூர்த்தி
செவ்வாய், வியாழன்
மாலை 3.30

இந்து நாகரிகம்
குமுதினி
செவ்வாய், வியாழன்
மாலை 3.30

அளவையியல்
நவம்
சனி, ஞாயிறு காலை 7.00

இந்து சமயம்
நவசிவாயகுருக்கள்
சனி, ஞாயிறு மாலை 3.30

தமிழ் - இலக்கியம்
கணேசலிங்கம்
வியாழன் காலை 9.00

இரசாயனம்
சதீஸ்
ஞாயிறு
மாலை 3.00

தமிழ் - இலக்கணம்
நவம்
சனி, ஞாயிறு
காலை 9.00

வர்த்தகம்
நாதகோபாலன்
சனி, ஞாயிறு காலை 10.30

கணக்கியல்
பிரபாகரன்
சனி, ஞாயிறு மாலை 3.30

O/L பகல்நேர வகுப்புக்கள் | 6,7,8,9,10 ஆண்டு வகுப்புக்கள் | 01.08.1993 ஆரம்பம் | இசைக்கருவிகள் வகுப்புக்கள் | A/L நாடகமும், அரங்கியலும்

(5588)

சிந்தனைக்கு

மழை பெய்வதை தனது சாதனை என்று வாதாடும் ஒரு கட்சி வறட்சிக்கும் அது தான் பொறுப்பு என்று எதிரிகள் பழிக்கும் போது வியப்படையக்கூடாது.

- ட்வைட் மாரோ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 02-08-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# சிறிமாவோ அம்மையார் எங்கே நிற்கிறார்

வடக்கு, கிழக்கில் விடுதலைப்புலிகளுக்கு எதிராகச் சிறிலங்கா இராணுவம் புரிந்துவரும். போரின் கடுமையையும், தார்ப்பரியத்தையும் சிறிலங்கா அரசியல்வாதிகள் இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லையோ என்ற சந்தேகம் அடிக்கடி எழுவதுண்டு. இச் சந்தேகத்தை மேலும் வலியுறுத்துமாப் போல் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஏ. எப். பி. செய்தி ஸ்தாபனத்திற்கு வழங்கிய பேட்டியும் உள்ளது.

அதாவது ''அரசாங்கம் தனது சகல நடவடிக்கைகளையும் நிறுத்திக் கொண்டு உடனடியாக நாடு முழுவதிலும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்'' என்ற சிறிமாவோ பண்டார நாயக்காவின் கோரிக்கையே மேலே எழுந்த சந்தேகத்திற்குக் காரணமாகும். ஆனால், சிறிமாவோ பண்டார நாயக்காவின் இக் கோரிக்கையானது சுமார் 35வருடங்களுக்கு மேல் அவர் தனது அரசியல் வாழ்வில் எதைக் கற்றுக் கொண்டார் என்ற கேள்வியை எழுப்புகின்றது.

சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கையை கைகட்டிப்பார்த்துக் கொண்டிருக்கவில்லை. 1977ஆம் ஆண்டளவில், சுமார் பத்தாயிரம் பேரைக் கொண்ட சம்பிரதாய பூர்வமாக இருந்த சிறிலங்கா இராணுவம் இன்று சுமார் ஒரு லட்சம் பேரைக் கொண்டதாக மாறியுள்ளது. அத்தோடு, ஏனைய ஆயுதப்படையினரின் தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, பொலிஸ் படையும் விரிவாக்கப்பட்டு உள்ளது. மேலும் ஊர்காவற்படை என்ற ரீதியில், சிங்களவர்களும் பெருமளவு ஆயுத மயப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதே போன்று 303 ரக துப்பாக்கிகளுடன் றிப்பிட்டர் ரக துவக்குகளுடனும் இருந்த பொலிஸ் படை உட்பட சகல ஆயுதப் படையினரும் பல நவீன போர்க் கருவிகளைப் பெற்றுள்ளன. இதில் நவீன டாங்கிகள், சுப்பர்சொனிக் குண்டு வீச்சு விமானங்கள், அதிவேக ரோந்துப்படகுகள், பீரங்கி பொருத்தப்பட்ட கப்பல்கள் என்பனவும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

ஆயுதப் படையின் இவ் விரிவாக்கமானது, 100 கோடி ரூபாவில் இருந்து 2,500 கோடி ரூபாவிற்கு

# புலிகளுக்கு எதிரான போர் யுக்தி ராணுவ உயர் பீடத்தில் குழப்பம்

(லண்டன்)

சிறிலங்கா இராணுவம் தன் வசம் இருக்கும் நிலப பகுதியை பாதுகாப்பாக தக்க வைத்துக் கொண்டு புலிகளை எதிர்த்து பெரியளவில் தாக்குதல் நடத்த போதுமான ஆட்பலம் சிறிலங்கா இராணுவத்தில் இல்லை. இவற்றில எது முக்கியம் என்ற பிரச்சினையும் உண்டு. உள்ளதை தக்க வைத்துக்கொள்வதா? எதிர்த் தாக்குதல் நடத்துவதா எதற்கு முன்னுரிமை அளிப்பது?

இதுவே சிறிலங்கா இராணுவத்தின் இன்றைய நிலை. இவ்வாறு பி.பி.ஸியின் முன்னாள் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ் மொறிஸ் இலங்கையின் போரில் நெருக்கடி என்ற தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட விவகாரம் தொடர்பாக இராணுவ உயர் மட்டத்திலேயே பிளவு காணப்படுகிறது. இத்தகைய காரணத்தால் அரச படையின் உள உறுதி குலைந்துள்ளது.

இந்த வகையில் புலிகள் தரப்பு நிலைமை பரவாயில்லை. புலிகள் எப்போதுமே ஒரு நீண்ட காலப் போர் பற்றியே பேசி வந்துள்ளனர். தாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை சிறிலங்கா அரசு வழங்கும் என்ற நம்பிக்கையை புலிகள் இழந்து விட்டனர் போலுள்ளது.

புதிய ஜனாதிபதி விஜயதுங்க போர் விடயம் தொடர்பாக புதிய எண்ணமோ போக்கையோ கொண்டிருப்பதாக தெரியவில்லை. எனவே இராணுவமும் வேதனை மிக்க பழைய பாதையில் இழுபறியாக செல்லும் என்றே தெரிகிறது.

இராணுவத் தளபதி சிசில் ...வத்தியரட்ன மூத்த அதிகாரிகளை புறக்கணித்து தனக்கு வேண்டப்பட்டவர்களுக்கு பதவி உயர்வு வழங்கினார் என்றும் இதனால் உயர்மட்டத்தில் பலர் கவலையடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது என கிறிஸ் மொறிஸ் தனது குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளார்.

பிரேமா கொலை விசாரணை

## சந்தேக நபர்களை விடுவிக்க நீதிபதி மறுப்பு

(கொழும்பு)

பிரேமதாசா கொலை வழக்கு தொடர்பாக இரகசியப் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிசிரகுமார மற்றும் சந்திரதாச ஆகியோரை விடுவிப்பதற்கு நீதிபதி மறுப்புத் தெரிவித்துள்ளார்.

அளுத்கடை நீதிமன்ற நீதிபதி முன்பாக இவர்கள் ஆஜர் செய்யப்பட்ட போது இவர்களின் சார்பாக ஆஜரான ராஜபக்ஷா நீதிமன்றில் கூறுகையில் தேசிய வீடமைப்பு அமைச்சினால் சாரதியாக நியமிக்கப்பட்ட இவ் இருவரும் திருமதி பிரேமதாசா கொழும்புக்கு வெளியே செல்லும் சமயங்களில் சாரதிகளாக கடமைபுரிந்துள்ளனர். சம்பவ தினத்தன்றும் இவ் இருவரும் திருமதி ஹேமா பிரேமதாசாவுடன் கண்டியில் இருந்துள்ளனர். இக் கோரச் சம்பவம் பற்றிக் கேள்விப்பட்ட பின்னர்தான் அவர்கள் கொழும்பு திரும்பியுள்ளனர். என்றும் தெரிவித்ததுடன் இரகசியப் பொலிசார் இவர்களை விடுதலை செய்ய நீதிபதி உத்தரவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். ஆனால் இரகசியப் பொலிசார் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அநுர மெதகொட இரகசியப் பொலிசாரின் புலன் விசாரணைகள் இன்னமும் முடியவில்லை எனத் தெரிவித்ததுடன் இவர்களை விடுவிப்பது விசாரணைகளைப் பாதிக்கும் எனவும் குறிப்பிட்டதை ஏற்றுக் கொண்ட நீதிபதி சந்தேக நபர்களை விடுவிக்க மறுப்பு தெரிவித்தார்.

## யுத்தப் பாதிப்பு சம்பந்தமான ஜெனிவா மாநாடு ஆக 31இல்

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது சம்பந்தமான சர்வதேச மாநாடு இவ்வருடம் ஆகஸ்ட் 31 முதல் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. இத் தகவலை சுவிற்சர்லாந்துத் தூதுவர் அன்றிவொன் கிறேபெற்றிட் கொழும்பில் வெளியிட்டுள்ளார்.

ஆகஸ்ட் 12, 1949 ஜெனிவா ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்தமனித நேய சட்டத்தை மீளவலியுறுத்துவதே இந்த மாநாட்டின் பிரதான நோக்கமாகும்.

சுவிஸ் பிரசைகள் அங்கத்துவம் வகிக்கும் சர்வதேச செஞ்சிலுவைக் குழு யுத்தத்தினால் ... பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சுப் பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளனர். இந்த மாநாடு தொடர்பான முன் வரைபுகளைத் தயாரிக்க ஐம்பது நாடுகளின் பிரதிநிதிகள் சென்ற ஏப்ரல் மாதத்தில் ஜெனிவா நகரில் கூடினார்கள்

## போர் நிறுத்தம் அறிவிப்பு

இஸ்ரேல் தென்லெபனான் மீது நடத்திய தாக்குதலில் போர்நிறுத்தம் ஒன்றுக்கு உத்தரவிட்டுள்ளது. லெபனான் மீது மாபெரும் தாக்குதலைத் தொடுத்த இஸ்ரேல் ஒருவார காலத்தின் பின் இந்த போர் நிறுத்தத்திற்கு உத்தரவிட்டுள்ளது ஜெருசலேமில் நேற்று விடுக்கப்பட்ட அறிவிப்பில் வான், கடல், மற்றும் தரை மார்க்கமான தாக்குதல்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

## ''வாதுவ'' வந்தடைந்தது

யாழ். குடாநாட்டிற்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'வாதுவ' கப்பல் நேற்று முன்தினம்பருத்தித்துறையை வந்தடைந்தது.

இக் கப்பலில் 1600 மெற்றிக் தொன் அரிசி, 750 மெற்றிக் தொன் உரம், 1000 மெற்றிக் தொன் சீனி, 200 மெற்றிக் தொன் பருப்பு, 100 மெற்றிக் தொன் பால்மா, 500 பரல் மண்ணெண்ணெய், 50 பரல் டீசல் மற்றும் யாழ். பிரதான தபாலகத்திற்கான 1238 தபால் பொதிகளும் எடுத்து வரப்பட்டுள்ளன. (பா),(நி)

## விதை உருளைக்கிழங்கு பெற யாழ். செயலகம் முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விவசாயிகளுக்கென விதை உருளைக்கிழங்கு தருவிப்பதற்கு யாழ்செயலகம் நடவடிக்கைமேற்கொண்டுள்ளது.

உருளைக்கிழங்கைத் தருவிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது தற்போது விவசாயிகளிடமிருந்து விதைபொருளுக்குரிய பணம் பெறும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக

## 'முத்துச் சிதறல்' வெளிவந்தது

மண்டைதீவுக் கொத்தணிப் பாடசாலைகளினால் ''முத்துச் சிதறல்'' எனும் மலர் வெளியீட்டு நிகழ்வு மேற்படி பாடசாலைகள் தற்சமயம் இயங்கும் ஆரியகுளம் புதியஉயர் கலைக் கல்லூரி மண்டபத்தில்நடைபெற்றது.

கொத்தணி அதிபர் கை. பேரின்பநாயகத்தின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் விடுதலைப்புலிகளின் தீவக மாணவர் அமைப்பைச் சேர்ந்த திரு. ஒப்பிலாமணி மற்றும் செல்வி கலைமதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திருப்பி அனுப்ப ஒப்பந்தம் சுவீடன் – சிறிலங்கா பேச்சுவார்த்தை

(கொழும்பு)

சுவிஷ்சர்லாந்தில் அகதி அந்தஸ்துக் கோரி அது மறுக்கப்பட்ட இலங்கையர்களைத் திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு சிறிலங்காவுடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ள உள்ளது.

சுவிஸ்-சிறிலங்கா ஒப்பந்தம் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாக அமையும் என்று ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிறட்மன் விரக்கோன் தெரிவித்தார்

இந்த ஒப்பந்தம் அடுத்த மாதம் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் கட்டம் கட்டமாகவே இலங்கையர் திருப்பி அனுப்பப் படவுள்ளனர். முதல் கட்டத்தில் சுமார் 200 இலங்கைத் தமிழர் திரும்பி அனுப்பப் படுவர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

## அச்சம் மிகுந்த சூழல் இப்போது இல்லை

முன்னாள் அமைச்சர் றொனி

முன்பு நிலவிய அச்சம் மிகுந்த சூழ்நிலையிலிருந்து மக்கள் இப்போது விடுவிக்கப் பட்டுள்ளனர். ஆனால் இப்போதும் அரசியல் மற்றும் பொருளாதாரத்துறைகளில் சிறிலங்கா பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கிஇருக்கின்றது நாம் இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கிச் செல்லவேண்டுமாயின் இவை தீர்க்கப்பட்டாகவேண்டும் என்று முன்னாள் நிதி அமைச்சர் றொனி.டி மெல் கூறியுள்ளார்.

தெவிநுவர தொகுதியின் சிறிசக்கோதய பிரிவினாவின் சமய நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அவர் அங்கு உரை நிகழ்த்துகையில் மேலும் எமக்கு இழப்பதற்கான நேரம் இப்போது இல்லை எனவும், சும்மா அலைந்து திரிவதால் நேரத்தை வீணாக்கக்கூடாது எனவும் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் இப்போது எதிர்நோக்கப்படும் பெரிய அரசியல் பிரச்சினை வடக்கு கிழக்கு போரும் பொருளாதாரப் பிரச்சினைகளுமேயாகும். பணவீக்கம் அதிகரித்து இருப்பதால்வாழ்க்கைச்செலவு பெரும் அளவில் உயர்ந்து விட்டதாகவும்மக்களால் இதனைச் சுமக்க முடியாமல் இருப்பதாகவும் தெரிவித்தார்.

## யாழ் கலைஞருக்கு பரீசில் பாராட்டு

யாழ் கலைஞரான 'கலைச் சுடர்' 'நடிப்பிசைக்காவலர்' கிறெகரி தங்கராஜாவின் கலையுலக வெள்ளிவிழா நிகழ்ச்சி வெகு சிறப்பாய் பரீஸ் மாநகரில் நடைபெறவிருக்கின்றது

இவரது கலையுலக வெள்ளி விழாவைப் பரீஸ் கலைக்கோயில் சங்கமம் வெகுவிரைவில் சிறப்பாகக் கொண்டாடவிருக்கின்றது (24)

## பரீட்சை நிலையம் மாற்றம்

யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட க. பொ. த. (உ/த) பரீட்சை நிலையம் இடம் மாற்றப்பட்டிருப்பதாக கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. இப்பாடசாலையிலிருந்து பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் மூன்றாம் இலக்க மண்டபத்தி

## நல்லூரில் மஞ்சத் திருவிழா

நல்லூர் அருளமிகு ஸ்ரீகந்தசுவாமி ஆலய 10ஆம் திருவிழா மஞ்சம் இன்று திங்கட்

எதிரான போர் நடவடிக்கையை கைகட்டிப்பார்த்துக் கொண்டிருக்கவில்லை. 1977ஆம் ஆண்டளவில், சுமார் பத்தாயிரம் பேரைக் கொண்ட சம்பிரதாய பூர்வமாக இருந்த சிறிலங்கா இராணுவம் இன்று சுமார் ஒரு லட்சம் பேரைக் கொண்டதாக மாறியுள்ளது. அத்தோடு, ஏனைய ஆயுதப்படையினரின் தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, பொலிஸ் படையும் விரிவாக்கப்பட்டு உள்ளது. மேலும் ஊர்காவற்படை என்ற ரீதியில், சிங்களவர்களும் பெருமளவுஆயுத மயப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதே போன்று 303 ரக துப்பாக்கிகளுடன் றிப்பிட்டர் ரக துவக்குகளுடனும் இருந்த பொலிஸ் படை உட்பட சகல ஆயுதப் படையினரும் பல நவீன போர்க் கருவிகளைப் பெற்றுள்ளன. இதில் நவீன டாங்கிகள், சுப்பர்சொனிக் குண்டு வீச்சு விமானங்கள், அதிவேக ரோந்துப்படகுகள், பீரங்கி பொருத்தப்பட்ட கப்பல்கள் என்பனவும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

ஆயுதப் படையின் இவ் விரிவாக்கமானது, 100 கோடி ரூபாவில் இருந்து 2.500 கோடி ரூபாவிற்கு மேல் அதாவது 25 மடங்கிற்கு மேல் இராணுவச் செலவீட்டை உயர்த்தியுள்ளது. இது மொத்த தேசிய வருமானத்தில் ஏழு வீதத்திற்கும் மேலாகும். வருடாந்த செலவீட்டில் 20 வீதத்திற்கும் அதிகமாகும். இச்செலவீடானது உலக நாடுகளில் இராணுவத்திற்கு உயர்ந்தளவு செலவீடு செய்யும் நாடுகளின் வரிசையில் சிறிலங்காவையும் சேர்த்துள்ளது.

மேலும், சிறிலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரிலோ, அன்றி தமிழருக்கு எதிரான நடவடிக்கையிலோ தயவு தாட்சணியம் எதுவும் காட்டியதாக இல்லை. தொடர்ந்து போரிட்டுக் கொண்டே இருக்கின்றது. தன்னால் இயன்ற சகல வழிமுறைகளையும் இராணுவம் பரீட்சித்துப் பார்த்துவிட்டது. பார்த்துக் கொண்டிருக்கின்றது. ஆனால், தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தையோ அன்றி, விடுதலைப் புலிகளையோ இராணுவ ரீதியாக வெற்றிகொண்டு விட அதனால் முடியவில்லை. இதற்கு காரணம் சிங்கள இராணுவத்தின் திறமை இன்மை என்பதை விட, விடுதலைப் புலிகளின் மனோ பலமும், விடுதலை வேட்கையுமே ஆகும்.

இந்நிலையில், எதிர்க்கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை அரசாங்கம் தீவிரப்படுத்தவேண்டும் என எதைக் கோருகின்றார் என்பது விளங்கவில்லை. அதாவது, சிங்களவர் அனைவரினதும் கையிலும் ஆயுதத்தைக் கொடுத்து வடக்கு- கிழக்கில் தமிழருக்கு எதிராகப் போரிட அனுப்புமாறு கோருகின்றாரா? அல்லது தேசிய வருமானம் முழுவதையும் வடக்கு - கிழக்குப் போருக்குத் திசை திருப்பு மாறு கோருகின்றாரா?

தற்பொழுதே சிறிலங்காவிற்கு உதவி வழங்கி வரும் நாடுகளும், நிதி நிறுவனங்களும் போருக்கான செலவீட்டைக் குறைக்குமாறு கோரி வருகின்றன. அத்தோடு, அவர்கள் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்று அரசாங்கம் மக்கள் மீது பல சுமைகளை ஏற்றி வருகின்றது. இதனால் மக்கள் இன்றே சொல்லொணா துயர்களை அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில் சிறிமாவே பண்டாரநாயக்காவின் கோரிக்கையை அரசு கடைப்பிடிக்குமானால் சிறிலங்காவில் நெல்லுக்குப் பதில் ரவைகளே விதைக்க வேண்டிவரும்.

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது சம்பந்தமான சர்வதேச மாநாடு இவ்வருடம் ஆகஸ்ட் 31 முதல் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. இத் தகவலை சுவிற்சர்லாந்துத் தூதுவர் அன்றி வொன் கிறேபெற்றிட் கொழும்பில் வெளியிட்டுள்ளார்.

ஆகஸ்ட் 12, 1949 ஜெனிவா ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்தமனிதநேய சட்டத்தை மீளவலியுறுத்துவதே இந்த மாநாட்டின் பிரதான நோக்கமாகும்.

சுவிஸ் பிரசைகள் அங்கத்துவம் வகிக்கும் சர்வதேச செஞ்சிலுவைக் குழு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்புத் தொடர்பான அறிக்கையை மாநாட்டில் சமர்ப்பிக்கவுள்ளது. ஜெனிவா ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் பணியை சர்வதேச செஞ்சிலுவைக் குழு பொறுப்பேற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சுப் பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளனர். இந்த மாநாடு தொடர்பான முன்வரைபுகளைத் தயாரிக்க ஐம்பது நாடுகளின் பிரதிநிதிகள் சென்ற ஏப்ரல் மாதத்தில் ஜெனிவா நகரில் கூடினார்கள்

தித்துறையை வந்தடைந்தது.

இக்கப்பலில் 1600 மெற்றிக் தொன் அரிசி, 750 மெற்றிக் தொன் உரம், 1000 மெற்றிக் தொன் சீனி, 200 மெற்றிக் தொன் பருப்பு, 100 மெற்றிக் தொன் பால்மா, 500 பரல் மண்ணெண்ணெய், 50 பரல் டீசல் மற்றும் யாழ். பிரதான தபாலகத்திற்கான 1238 தபால் பொதிகளும் எடுத்து வரப்பட்டுள்ளன. (பா),(நி)

## விதை உருளைக்கிழங்கு பெற யாழ். செயலகம் முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விவசாயிகளுக்கென விதை உருளைக்கிழங்கு தருவிப்பதற்கு யாழ்செயலகம் நடவடிக்கைமேற்கொண்டுள்ளது.

உருளைக்கிழங்கு செய்கையில ஆர்வமுள்ள விவசாயிகளிடமிருந்து அவர்களுக்குத் தேவையான அளவு விதை உருளைக்கிழங்கிற்குரிய பணத்தை முன்கூட்டியே பெற்று வெளிநாட்டிலிருந்து விதை உருளைக்கிழங்கைத் தருவிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது

தற்போது விவசாயிகளிடமிருந்து விதைபொருளுக்குரிய பணம் பெறும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அறியப்பட்டுள்ளது.

சந்தைப்படுத்தக்கூடியதாகவே இம்முறை இப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் என்றும் அறியப்பட்டுள்ளது (தி)

தீர்க்கப்பட்டாக வேண்டும் என்று முன்னாள் நிதி அமைச்சர் ரொனி.டி மெல் கூறியுள்ளார்.

தெவிநுவர தொகுதியின் சிறிசத்தோதய பிரிவினாவின் சமய நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அவர் அங்கு உரை நிகழ்த்துகையில் மேலும் எமக்கு இழப்பதற்கான நேரம் இப்போது இல்லை எனவும், சும்மா அலைந்து திரிவதால் நேரத்தை வீணாக்கக்கூடாது எனவும் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில்இப்போது எதிர்நோக்கப்படும் பெரிய அரசியல் பிரச்சினை வடக்கு

### நல்லூரில் மஞ்சத் திருவிழா

நல்லூர் அருளமிகு ஸ்ரீகந்த சுவாமி ஆலய 10ஆம் திருவிழா மஞ்சம் இன்று திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு விசேட அபிஷேகம் பூசைஆராதனையை அடுத்து மஞ்சத்தில் முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக ஆரோகணித்து அடியார்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார்.

யாழ் கலைஞரான 'கலைச்சுடர்' 'நடிப்பிசைக்காவலர்' கிறெகரி தங்கராஜாவின் கலையுலக வெள்ளிவிழா நிகழ்ச்சி வெகுசிறப்பாய் பாரீஸ் மாநகரில் நடைபெறவிருக்கின்றது

இவரது கலையுலக வெள்ளி விழாவைப் பாரீஸ் கலைக்கோயில் சங்கமம் வெகுவிரைவில் சிறப்பாகக் கொண்டாடவிருக்கின்றது (24)

### பரீட்சை நிலையம் மாற்றம்

யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட க. பொ. த. (உ/த) பரீட்சை நிலையம் இடம் மாற்றப்பட்டிருப்பதாக கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. இப்பாடசாலையிலிருந்து பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் மூன்றாம் இலக்க மண்டபத்திலுள்ள பரீட்சை நிலையத்திலும், ஏனைய பரீட்சார்த்திகள் பளை மகாவித்தியாலய பரீட்சை மண்டபத்திலும் பரீட்சைக்கு தோற்றும்படி கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். [21]

## மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் மாற்றம் விரைவில்

### வாழப்பாடி நம்பிக்கை

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் கனவு நொருங்கிப் போய்விட்டதாக தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார். பிரதமர் நரசிம்மராவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அறிக்கைவெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் மாற்றத்தை காங்கிரஸ் விரைவில் ஏற்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளார்.

## தமிழகமுதல்வர் ஜெயலலிதா பதவிவிலக வேண்டும்

### திருநாவுக்கரசு கோரிக்கை

(சென்னை)

பிரதமர் நரசிம்மராவ்விற்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை தோல்வி அடைந்திருப்பதை அடுத்து தமிழக முதல்வர் ஜெயலலிதா பதவி விலக வேண்டும் என்று எம். ஜி. ஆர் அண்ணா தி. மு. க. தலைவர் திருநாவுக்கரசு கூறியுள்ளார்.

சென்னையில் அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் ஆட்சியை பிடித்த அ. தி. மு. க இப்போது காங்கிரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வாக்களித்தது நம்பிக்கை துரோக செயல் என்றும் அவர் குற்றஞ் சாட்டினார்.

## ஜார்க்கன்ட் தன்னாட்சிசபை மா. அரசு மறுப்பின் கிளர்ச்சி

(டில்லி)

பீகாரில் உத்தேச ஜார்க்கன்ட் மாநில தன்னாட்சி சபைக்கான திருத்த சட்டமூலத்தை ஏற்றுக்கொள்ள மாநில அரசு தவறிவிட்டால் ஆகஸ்ட் 15-ம் திகதிக்குப் பின்னர் கிளர்ச்சிப் போராட்டத்தில் இறங்கப் போவதாக ஜார்க்கன்ட் மக்கள் கட்சி அறிவித்துள்ளது.

பாட்னாவில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர்களிடம் பேசிய இக்கட்சியின் தலைவர் திரு. சூரியசிங் தேஷ்ரா மேலும் கூறுகையில் பிரச்சினையில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையைப் போக்க மற்றொரு சுற்றுப் பேச்சுக்கள் ஆகஸ்ட் 12-ம் திகதி நடத்துவதற்கு பீகார் மாநில முதல்வர் லாலு பிரசாத் யாதவ் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் அவர்தெரிவித்தார்.

### பெருந்துறை இடைத்தேர்தல் செப்டம்பர் 4-ல்

(சென்னை)

பெருந்துறை சட்டமன்றத் தொகுதியின் இடைத்தேர்தல் செப்டம்பர் நான்காம் திகதி நடைபெறும் என்றும், இதற்கான வேட்பு மனுத் தாக்கல் ஆகஸ்ட் மூன்றாம் திகதி ஆரம்பமாகி ஆகஸ்ட் பத்தாம் திகதி வரை முடிவடையும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 11-ம் திகதி வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்படும். வேட்பு மனுக்கள் 14-ம் திகதி மீளப் பெறுவதற்கான இறுதி நாளாகும். அ.இ.அ. தி.மு.கவின் சட்டப்பேரவை உறுப்பினர் வி.என். சுப்பிரமணியன் அண்மையில் காலமானதையடுத்து பெருந்துறை தொகுதிக்கு வெற்றிடம் ஏற்பட்டது தெரிந்ததே.

## தீவிரவாதத்தைக் குறைக்க மாநில அரசுகளுக்கு உதவி

### மத்திய அரசு தெரிவிப்பு

(டில்லி)

நாட்டில் அதிகரித்து வரும் தீவிரவாதப் போக்கைக் கட்டுப்படுத்த மாநில அரசுகள் பாதுகாப்பு அமைப்புக்களை வலுப்படுத்தவேண்டும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

மக்களவையின் கேள்வி நேரத்தின் போது கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் மேலும் கூறுகையில், இது தொடர்பாக மாநில அரசுகளுக்கும், மாநில ஆளுநர்களுக்கும் கடிதம் எழுதப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தீவிரவாதத்தை எதிர்ப்பதற்கு தேவையான அனைத்து உதவிகளும் மாநிலங்களுக்கு வழங்கப்படும் என்று உறுதி அளித்த அவர் தீவிரவாதக் கருத்துக்களை பரப்புவோருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## மத்திய படை பாதுகாப்பில் தேர்தல் நடப்பது நல்லதல்ல

### பார்வார்ட் புளக் கூறுகிறது

பழநி, மற்றும் இராணிப்பேட்டை தொகுதிகளில் மத்திய அரசின் பாதுகாப்பு படைகளை வைத்துத்தான் தேர்தல் நடத்தவேண்டும் என்பது போன்ற நிலைமையை ஏற்படுத்தி தமிழக அரசைக்கலைக்க முற்படுவது நல்லதல்ல என்று அகிலஇந்தியபார்வார்ட் புளக் கட்சி கூறியுள்ளது.

மதுரையில் நேற்று முன்தினம் அக்கட்சியின் பொதுச் செயலாளர் கே. கந்தசாமி வெளியிட்ட ஓர் அறிக்கையில் தமிழகத்தில் குறிப்பாக தேர்தல் நடைபெறவிருக்கும் இரு தொகுதிகளிலும் பூரண அமைதிநிலவுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேர்தல் ஆணையகம் நடுநிலையுடன் செயற்பட வேண்டும் என்றும், சுயநல அரசியல் வாதிகளின் தூண்டுதல்களுக்கு இரையாகிவிடக் கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கூட்டணி அரசியலை நோக்கி இந்தியா நகர்ந்து செல்கிறது

### —இ எம். எஸ். நம்பூதிரிபாத்

(இஸ்லாமாபாத்)

இந்தியா கூட்டணி அரசு அமைப்பதை நோக்கி சென்று கொண்டிருப்பதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரான இ. எம். எஸ். நம்பூதிரிபாத் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இந்தியாவின் இரு பெரும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் இணைந்து செயற்படுவதற்கான காலம் இன்னும் வரவில்லை என்றும், இந்து மத தீவிரவாத உணர்வுகளுக்கு காங்கிரஸ் மதிப்பளித்து வருவதால் அக் கட்சியுடன் இணைந்து செயற்படுவது சாத்தியமற்றது எனவும் தெரிவித்தார்.

ஈழநாதம்

## பொருட்காட்சி

(வடமராட்சி)

கரவெட்டி இலங்கை செஞ்சிலுவைச் சங்க பணிமனையில் தையல் பொருட்காட்சி இன்று திங்கட்கிழமை நெல்லியடியில் உள்ள பணிமனையில் நடைபெறும். (யோ)

# தமிழர்களின் உரிமைகளை பெறுவதில் பின்னிற்ககூடாது

**- தொண்டமான்**

(கொழும்பு)

தமிழ் மக்கள் தாம் பெற வேண்டிய சகல உரிமைகளையும் பெற்றுவாழ வேண்டிய இனம் இதில் எவரும் பின்னிற்கக் கூடாது. நியாய பூர்வமாகக் கேட்டோம், அது கிடைக்காவிட்டால் அதனை பெற்றுக்கொள்ள அடுத்த நடவடிக்கையை எடும்போம் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமான் தெரிவித்தார்.

மலையகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது உரிமைகளையும் சலுகைகளையும் பெற நாம் பின்னிற்கக்கூடாது. அவ்வாறு இல்லாது பின்னிற்கத்தொடங்கினால் எமக்கு எந்த உரிமைகளும் கிடைக்கப் போவதிலலை. எனவே எவர் எம்மை பற்றி எதைத்தான் கூறினாலும், நாம் பெரிதுபடுத்தாது எமது இலட்சியத்திலேயே கருத்தாக இருக்க வேண்டும்.

இன்று சிலர் எம்மைப் பற்றி இனவாதம் பேசுகின்றனர். நன்றாகப் பேசட்டும், இல்லாவிட்டால் கலவரத்தைக் கூடத் தொடக்கட்டும். நாம் எதற்கும் அஞ்சக் கூடாது எனவும் தொண்டமான் தெரிவித்தார்.

---

கட்சிமாறல் சட்ட நீக்கம்

## பிரேரணை கொண்டு வருவதை நெவில் கைவிட்டார்

(கொழும்பு)

அரசியல்வாதிகள் கட்சிமாறினாலும் தொடர்ந்து பதவி வகிக்க வகை செய்யும் அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தச்சட்ட மூலத்தைக் கொண்டுவரும் யோசனையை களுத்துறை மாவட்ட சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் நெவில் பெர்னாண்டோ கைவிட்டுள்ளார்.

இது தொடர்பாக பத்திரிகையாளர்களிடம் பேசியஅவர் மேலும் கூறுகையில் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் சுதந்திரமாகச் செயற்பட வேண்டும் என்பதற்காகவே இப்பிரேரணையைக் கொண்டு வந்தேன் இப்போது அதற்கு எம்.பிக்களின் ஆதரவு கிட்டவில்லை ஆகையால் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் பல சிக்கல்கள் ஏற்படும் என்று தெரிவித்தார்.

## உயர்தர பரீட்சைக்கு கட்டணம் தேவையில்லை

(கொழும்பு)

க. பொ. த. (உயர் தரம்) மாணவர்கள் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சைக்கு இரண்டாவதுமுறையும்பரீட்சைக் கட்டணம் செலுத்தாமல் பாடசாலைகளின் ஊடாகத் தோற்ற முடியும். இதனை ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார்.

க. பொ. த. (உயர் தரம்) பரீட்சைக்குமுதல்முறைதோற்றிய மாணவர்களை, பெறுபேறுகள் வரும் வரையில் தொடர்ந்தும் பாடசாலையில் கற்க பாடசாலை நிர்வாகம் ஒழுங்குகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

இப்போதுள்ள நடைமுறையின்படி முதல்முறை க. பொ. த (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றியவர்கள் அதன்பின் பாடசாலையை விட்டு விலக வேண்டும்.

க. பொ. த. (சாதாரணம்) மாணவர்கள், அப்பரீட்சைக்குத் தோற்றிய பின் பாடசாலையில் தொடர்ந்து கல்வி பயில அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பரீட்சையில் தேர்ச்சிஅடையாது போனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தாமல் பாடசாலையின் ஊடாக இரண்டாவது முறையும் பரீட்சைக்குத் தோற்றலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. தனிப்பட்ட பரீட்சார்த்தி பரீட்சைக்கட்டணமாக ரூபா 50 செலுத்தவேண்டும்.

## உடப்பு, முந்தல் பகுதியில் 27 தமிழ் இளைஞர் கைது

உடப்பு, முந்தல், கருங்காலிச்சோலை போன்ற தமிழர் பெருமளவில் வாழும் பகுதிகளில் அதிகாலை வேளையில் சுற்றி வளைத்துச் சோதனை செய்த சிறிலங்கா பொலிசார் அங்கிருந்து 27 தமிழ் இளைஞர்களை கைதுசெய்தனர்.

இவர்கள் விசாரணைக்காக பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டு தீவிர விசாரணையின் பின்னர் மாலை விடுவிக்கப்பட்டனர்.

வெளிவந்துவிட்டது




- தளபதி கிட்டு நினைவுப் பாடல்கள்
- கரும்புலிகள் பாடல்கள்
- செஞ்சோலை பாடல்கள்
- கூவு குயிலே பாடல்கள்
- விழித்தெழுவோம் பாடல்கள்
- விடியலைத் தேடும் பறவைகள் பாடல்கள்

ஆகியன உள்ளடங்கிய

தமிழீழ எழுச்சிப் பாடல்கள்

## 6 மாதங்கள் கொடுப்பனவு இல்லை

சமூகசேவைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்றுவரும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு கடந்த தை மாதத்தின் பின்னர் ஆறு மாதங்களுக்குரிய பணம் வழங்கப்படவில்லையென தெரியவந்துள்ளது.

இவ் உதவிப்பணம் வடக்கு, கிழக்கு மாகாணசபையினரால் அவ்வப் பிரதேச செயலகங்களுக்கு இதுவரை அனுப்பாததினாலேயே இவற்றை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

### கிருமிநாசினியின்

போதனா வைத்தியசாலை ஈடுபட்டுவருவதாகவும் தெ..ய வருகின்றது.

இதே வேளை 'லைசோல்' பிரேத அறை, மலசல கூடம், ஆஸ்பத்திரி விடுதிகள் மற்றும் வெளிநோயாளர் பகுதி போன்றனவற்றிற்கு அவசியம் தேவைப்படுவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. [நி]

இரு

### ராணுவத்திற்கு

பதிகள் உறுதிப்படுத்தவில்லையாயினும் புலிப்படையினர் தமது போர் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கென பெருமளவு ஆயுதங்களை மீண்டும் கைப்பற்றி இருப்பார்கள் என்பதும் வெளிப்படை. மண்கிண்டிமலை இராணுவமுகாம் தாக்குதலின்போது நாலரைக் கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றியதாக தமக்கு செய்தி கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக தமிழர்கள் வாழும் இந்தப் பகுதியில் அரசு தமிழர்கள் அல்லாதவர்களை குடியமர்த்தத் தீர்மானித்ததிலிருந்து இந்தப்பகுதி சர்ச்சைக்குரிய பகுதியாக இருந்து வருகிறது

இராணுவத் தளபதிகளும் அமைச்சர்களும் இந்தபகுதிக்கு சென்று மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க உறுதி கூறினாலும் இங்கு குடியமர்த்தப்பட்ட மக்கள் மீண்டும் இந்தப்பகுதிகளில் குடியேற அஞ்சி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

### கைதிகளின்

# வடக்கு-கிழக்கு யுத்தமே; நாட்டின் முக்கிய பிரச்சினை

**- றொனி டி மெல்**

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு யுத்தமும், இனப்பிரச்சினையும் இந்த நாடு இன்று எதிர்நோக்கியுள்ள பிரதான அரசியல் பிரச்சினைகளாகும். இதற்காகப் பெருமளவில் எமது வளங்கள் வீணாக்கப்படுகின்றது. பணவீக்கமும், வாழ்க்கைச் செலவு உயர்வுமே பிரதான பொருளாதாரப் பிரச்சினைகளாகும் இவை எந்த ஒரு அரசினாலும் இலகுவாகத் தீர்க்கப்படககூடிய பிரச்சினைகள் அல்ல. இவற்றில் சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேசிய இணக்கம் அவசியம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் இவ்வாறான தேசிய இணக்கத்தை ஏற்படுத்துவதற்கு தேசிய அரசு ஒன்று அவசியமில்லை. இவ்வாறு முன்னாள் நிதி அமைச்சர் றொனி டிமெல் தெரிவித்தார்.

தெவிநுவர தேர்தல் தொகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் அரசியல் கட்சிகள் நாட்டின் நலனுக்காக பல்வேறு அடிப்படைப்பிரச்சினைகளில் இணைந்து வருவதன் மூலம் இவ்வாறான தேசிய இணக்கம் ஒன்றை எட்ட முடியும். வேறு பல நாடுகளிலும் இவ்வாறான இணக்கம் ஏற்பட்டுள்ளது இதனை இங்கும் ஏற்படுத்த முடியும் என்றார்.

இவ்வாறான இணக்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு தீவிரமாக மக்கள் அபிப்பிராயத்தை ஏற்படுத்த வேண்டும் இதற்கு வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் முக்கியமான பங்களிப்பை வழங்க முடியும். இவ்வாறான இணக்கம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மட்டும் அவசியமான தொன்றல்ல. 21ஆம் நூற்றாண்டுக்காக எம்மைத் தயார் படுத்திக் கொள்ளவும் இது அவசியம் என்றும்,

21ஆம் நூற்றாண்டை நோக்கிச் செல்வதற்கு இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவது அவசியமாகும். இழப்பதற்கு எம்மிடம் நேரம் இல்லை. இந்த விஷயத்தில் நாம் மெள்ளச் செல்லக் கூடாது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் எமது மக்கள் தாங்கமுடியாத சுமைகளைத் தாங்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பணப் புழக்கத்தைக் கட்டுப்பாடின்றி அதிகரிப்பதும் இதற்கு உதவவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### வங்கி

வங்கி, இலங்கை வங்கி மற்றும் தேசிய வங்கியில் பலர் 7 வருடங்களுக்கு மேல் அமைய ஊழியராகக் கடமையாற்றுவதாக வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### இதயபூமி

இவர்களில் பலத்த காயமடைந்த 17பேர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியிலும் ஏனையோர் பதவியா ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை விடுதலைப்புலிகளால் நிர்மூலம் ஆக்கப்பட்ட மண்கிண்டி மலை இராணுவ முகாம் தாக்குதல் நடந்த அன்று பிற்பகல்வரை எரிந்து கொண்டிருந்ததாக அப்பத்திரிகை மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

மணலாறு தாக்குதலை அடுத்து கூட்டுப்படைத் தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, இராணுவ தளபதி ஜெனரல் சிசில்

## அனுராவின் ஆட்களை களையெடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கட்சி அமைப்பாளர் 40 பேரை கட்சியிலிருந்து நீக்கியுள்ளதாக சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் அமைப்பாளர்கள் கட்சியில் இருந்து இடைநிறுத்தப் பட்டுள்ள தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்காவிற்கு மிக நெருக்கமானவர்கள் என அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கட்சிக் கொள்கையை மீறியமையினால் இவர்கள் கட்சியில் இருந்து நீக்கப்பட்டதாகவும்சுதந்திரக்கட்சிஅமைப்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.



❋ தளபதி கிட்டு நினைவுப் பாடல்கள்
❋ கரும்புலிகள் பாடல்கள்
❋ செஞ்சோலை பாடல்கள்
❋ கூவு குயிலே பாடல்கள்
❋ விழித்தெழுவோம் பாடல்கள்
❋ விடியலைத் தேடும் பறவைகள் பாடல்கள்

ஆகியன உள்ளடங்கிய

## தமிழீழ எழுச்சிப் பாடல்கள்

பாகம் 4

புத்தகம் வெளிவந்துள்ளது.

**விலை - 30 ரூபா**

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

## தமிழ்த்தாய் புத்தகசாலை

191, மின்சார நிலைய வீதி,
(பஸ்நிலைய அருகாமை)
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- ★ வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும்.
★ இப்புத்தகத்தினை நல்லூரில் லிங்கம் கூல் பாருக்கு அருகாமையில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட புத்தக நிலையத்திலும் பெற்றுக்கொள்ளலாம். இங்கு போராட்டம் பற்றி எம்மால் வெளியிடப்பட்ட புத்தகங்கள் அனைத்தும் விற்பனையாகின்றன என்பதையும் அறியத்தருகின்றோம். (சி-7111)

## சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் (தமிழ்) பதவிக்கான வெற்றிடம்

தமிழீழ நீதி மன்றங்களில் சேவையாற்றுவதற்கு தகுந்த தகைமைகளும், அனுபவமும் உள்ளவர்களிடமிருந்து சுருக்கெழுத்து தட்டெழுத்தாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் சொந்த விபரங்கள், தகைமைகள் அடங்கிய விண்ணப்பத்தை 10-08-93 க்கு முன்னர் கீழ்க் குறிப்பிடும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல: 197
C/o ஈழநாதம்
81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். (சி/7100)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 02-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இவ் உதவிப்பணம் வடக்கு, கிழக்கு மாகாணசபையினரால் அவ்வப் பிரதேச செயலகங்களுக்கு இதுவரை அனுப்பாததினாலேயே இவற்றை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

### கிருமிநாசினியின்

போதனா வைத்தியசாலை ஈடுபட்டுவருவதாகவும் தெ..ய வருகின்றது.

இதே வேளை 'லைசோல்' பிரேத அறை, மலசல கூடம், ஆஸ்பத்திரி விடுதிகள் மற்றும் வெளிநோயாளர் பகுதி போன்றவற்றிற்கு அவசியம் தேவைப்படுவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. [நி]

### இரு

ந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் கட்டுவனைச் சேர்ந்தவரும் தற்போது கோப்பாயில் வசிப்பவருமாகிய ஜெயந்தி கதிர்காமநாதன் (வயது 31) தெரிவிக்கையில் தெல்லிப்பழையைச் சேர்ந்தவரும் சண்டிலிப்பாயில் வசித்தவருமாகிய மயில்வாகனம் பரமேஸ்வரன் (வயது 24) என்பவர் தன்னுடன் கொழும்பிலிருந்து வந்தார் எனவும் இவரை கடற்படையினர் தங்கள் பீரங்கிப் படகில் ஏற்றியதை தான் கண்டதாகவும் தெரிவித்தார். மேலும் இப் படகில் பயணம் செய்த மூவர் கரவெட்டியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவித்தார். (நி) (பா)

### ஆறு மாத காலப்

மரணங்களில் குறைப் பிரசவம் காரணமாக17 குழந்தைகளும் நிமோனியாவினால்15குழந்தைகளும், சளியினால் 13குழந்தைகளும். பிறப்பின்போது ஏற்பட்ட நோயினால் ஆறு குழந்தைகளும், வயிற்றோட்ட நோய் காரணமாக 3 குழந்தைகளும் ஏனைய நோய் காரணமாக 3 குழந்தைகளும் இறந்துள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி)

## நியூ யாழ் சைனீஸ்

★ நூடில்ஸ்
★ கோழி புரியாணி
★ (F,பிறைட் றைஸ்

ஏனைய சைனீஸ் உணவு வகைகளுக்கும்

நியூ யாழ் சைனீஸ்
124,
முதலாம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம். (5553)

கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றியதாக தமக்கு செய்தி கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக தமிழர்கள் வாழும் இந்தப் பகுதியில் அரசு தமிழர்கள் அல்லாதவர்களை குடியமர்த்தத் தீர்மானித்ததிலிருந்து இந்தப்பகுதி சர்ச்சைக்குரிய பகுதியாக இருந்து வருகிறது

இராணுவத் தளபதிகளும் அமைச்சர்களும் இந்தபகுதிக்கு சென்று மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க உறுதி கூறினாலும் இங்கு குடியமர்த்தப்பட்ட மக்கள் மீண்டும் இந்தப்பகுதிகளில் குடியேற அஞ்சி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

### கைதிகளின்

கொழும்புப் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்ப்பதிலும் தமது இயலாமை நிலையிலும் அக்கறை காட்டிவரும் அவர்கள் சிறிலங்காவில் இருந்து சாதகமான செய்தி ஏதும் கிடைக்குமா என்பதே அவர்களது அங்கலாய்ப்பாகவுள்ளது.

தாம் நாளை காலை 11 மணிமுதல் நீர் அருந்துவதை நிறுத்தப் போவதாக தெரிவித்த யுத்தக் கைதிகள் தம்மை விடுவிக்க சிறிலங்கா அரசும் மற்றும் சிறிலங்காவிலுள்ள பொறுப்புவாய்ந்தவர்கள் அனைவரும் மனிதாபிமான அடிப்படையில் முன்வர வேண்டுமென தெரிவித்துள்ளனர்.

தம்முடன் உண்ணாவிரதமிருக்கும் யுத்தக் கைதிகள் பலரின் நிலை மோசமான கட்டத்தை அடைந்துள்ளதாகவும் இவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நான்காவது நாளாக உண்ணாவிரதத்தை தொடரும் யுத்த கைதிகள் பற்றி அவர்களது உறவினர்கள் சார்பில் சோமாவதி என்பவர் தெரிவிக்கையில், நாளைமுதல் நீர் அருந்துவதை தமது பிள்ளைகள் கைவிடப் போவதால் தமது பிள்ளைகளைக் காப்பாற்ற மனிதாபிமான அடிப்படையில் சிறிலங்கா அரசு முன்வர வேண்டும் என தெரிவித்தார். தமது பிள்ளைகளை இந்த நிலையில் விட்டுவிட்டு கொழும்பு சென்று எதனையும் சாதித்துவிடமுடியாது. என்பதால் தாம் இங்கேயே தங்கியிருக்க போவதாயும் சோமாவதி என்பவர் கூறினார்.

### வெலிக்கடையில்

விரதப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமையைக் கண்டித்தும் தம்மை விடுதலை செய்யக் கோரியுமே இவர்கள் மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

வதாக வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### இதயபூமி

இவர்களில் பலத்த காயமடைந்த 17பேர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியிலும் ஏனையோர் பதவியா ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை விடுதலைப்புலிகளால் நிர்மூலம் ஆக்கப்பட்ட மண்கிண்டி மலை இராணுவ முகாம் தாக்குதல் நடந்த அன்று பிற்பகல்வரை எரிந்து கொண்டிருந்ததாக அப்பத்திரிகை மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

மணலாறு தாக்குதலை அடுத்து கூட்டுப்படைத் தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, இராணுவ தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரத்ன ஆகியோர் அப்பகுதிக்கு விரைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### இராணுவ

டன. இதன்போது அம் முகாம்களில் தங்கியிருந்த இராணுவத்தினர் தப்பி ஓடியதாகவும் இதனால் 5 லட்சம் ரூபா பெறுமதியான துப்பாக்கிகள், ரவைகள், எறிகணைகள், பெரும் எண்ணிக்கையிலான இராணுவ சீருடைகள், படுக்கைகள் மற்றும் உடைமைகளும் எரிந்து சாம்பராகின என அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இம் முகாம் இரு மணிநேரமாக எரிந்து கொண்டிருந்ததாகவும், அருகிலுள்ள சீனித் தொழிற்சாலையிலிருந்து எடுத்துவரப்பட்டு களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த பெருமளவு சீனியே இவ்வாறு நடைபெற்றதற்கு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### எம்மை

வரின் உறவினரான அபேரட்ண என்பவர் பொரல்லை காசல் வீதியில் ஓர் உண்ணாவிரதத்தை மேறகொண்டார் அதன் அழுத்தத்தினாலேயே அரசாங்கம் எம்மை இங்கு வர அனுமதித்தது.

எனவே நாம் இங்கிருந்து செல்வதானால் எமது பிள்ளைகளுடனேயே செல்வோம் என்றார்.

### நிவாரண

செயலகத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளன. இவற்றினை ஒவ்வொரு பகுதி உதவி அரச அதிபர்களும் தங்களுக்குத் தேவையான முத்திரைகளின் பெறுமதிக்கமையஎதிர்வரும் 4ஆம் திகதிக்கு முன்னதாக யாழ். செயலக புனர் வாழ்வுப் பகுதியில் பெற்றுக்கொண்டு உடனடியாக முத்திரைகளை உரியவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (பா)

ஏற்படுத்த முடியும் என்றார்.

இவ்வாறான இணக்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு தீவிரமாக மக்கள் அபிப்பிராயத்தை ஏற்படுத்த வேண்டும் இதற்கு வெகுஜனத் தொடர்

வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பணப் புழக்கத்தைக் கட்டுப்பாடின்றி அதிகரிப்பதும் இதற்கு உதவவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## அனுராவின் ஆட்களை களையெடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கட்சி அமைப்பாளர் 40 பேரை கட்சியிலிருந்து நீக்கியுள்ளதாக சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் அமைப்பாளர்கள் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்காவிற்கு மிக நெருக்கமானவர்கள் என அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கட்சிக் கொள்கையை மீறியமையினால் இவர்கள் கட்சியில் இருந்து நீக்கப்பட்டதாகவும்சுதந்திரக்கட்சிஅமைப்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 01-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 10534

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்.

42-3726 41-9652 27-5058 26-1728 41-5605
28-9927 26-9201 24-9609 24-7375 24-9938
41-9661 28-3029 28-1992.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-1292 27 6741 24-6336 27-2016 26-6775
24-2860 22-6692 26-2764 26-0672 26-0407
27-7740 24-7628 41 9111 24-2628.

## மரண அறிவித்தல்

## இளையதம்பி சரஸ்வதி

அம்பன் கொட்டோடையைச் சேர்ந்த இளையதம்பி சரஸ்வதி 01-08-1993 காலை காலமாகிவிட்டார்.

அன்னார் கொட்டோடைஇளையதம்பி இலட்சுமி ஆகியோரின் அன்புமகளும் நவரத்தினம் (வட்டக்கச்சி),சிவசுப்பிரமணியம்(மதுவரிஇலாகா.சாவகச்சேரி),சதாசிவம்(ஆசிரியர்), சந்திரலிங்கம், காலஞ்சென்ற ஜெயக்கொடி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவமணிதேவி, குணரஞ்சிதம், ராதா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவதர்சன், விஜிதரன், மயூரா, 'சிவதரன், நிசாந், பிரசாந், தீபிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், திரு கதிரவேல்' திருமதி கதிராமு ஆகியோரின் பெறாமகளுமாவார். அன்னாரின் பூதவுடல் நேற்று 01-08-1993 அன்று கரும்பின்காடு மயானத்தில் தகனம் செய்யபபட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. சதாசிவம்
(சகோதரன்)
அம்பன்,
குடத்தனை.
(5601)